1979 மார்ச் 30]

Japsense meihod of cultivation in Pudukottai districi

*Q. No.557 —THIRU Y. S. M. YUSUFF ; Will the Hon'ble Minister for Agriculture and Irrigation be pleased to state :—

(a) whether it is a fact that the geographicai nature of soil in Pudukottai district is not hard ; and

(b) if so whether there is any proposal under the consideration of the Government to raise wet crops in the district ;

(c) whether the Japanese method of culivation has also been included in this scheme ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) மண் அமைப்பு இறுக்கமான நிலை இல்லாத இடங்களில் நஞ்செய் சாகுபடி செய்ய அரசின் கீழ் தனித்திட்டமில்லை. இங்கே உள்ள மண் அமைப்பு ஏற்கெனவே நஞ்செய் சாகுபடிக்கு ஏற்றதாகத்தான் இருக்கிறது.

(இ) ஜப்பானிய காங்கிரீட் முறையில் இங்கு நஞ்செய் சாகுபடி செய்ய திட்டம் ஏதும் இல்லை.

திரு. யா. சை.மு. யூசப்: பேரவைத் தலைவரவர்களே, நஞ்சை சாகுபடிக்கு ஏற்ற நிலமாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதில் எந்தவிதமான மாறுபாடும் எனக்கு இல்லை. இருந்தபோதிலும், மாதம் மும்மாரி பொழியும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கிடைக்கும் தண்ணீர் வீணாகச் சென்று விடுகிறது. தேவையான தண்ணீர் இல்லாமல் போய்விடுவதாலும், தண்ணீர் தடுப்பு இல்லாததாலும் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது; எனவேதான், ஜப்பானிய காங்கிரீட் முறை ஏற்படுத்தப்படுமா என்ற முறையிலே கேள்வியைக் கேட்டிருந்தேன். அதற்கு மாற்றாக அந்தத் தரையிலே சரளையைக் குறைத்து தரையை இறுக்கமாக ஆக்கி விவசாயம் செய்வதற்கான திட்டம் வகுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, குளங்களை நம்பித்தான் பாசன வசதிகள் இருக்கின்றன. விவசாயப் பெருங்குடி மக்களும் அங்கே குளங்களில்லாமல் பாசன வசதி பெறுவதற்கோ, விவசாயம் செய்வதற்கோ, நஞ்சை பயிர்கள் உற்பத்தி செய்வதற்கோ முடியாது. வேறு வழியில்லை. ஆகவே, அங்கு குளங்களை அதிகப்படுத்த

வேண்டுமென்ற நோக்கத்தோடு, எஸ்.எம்.ஐ.பி. என்கின்ற தனி சிறப்புப் பாசனத் திட்டத்தின்கீழ் அதிகமான குளங்களை, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பாடு செய்கிறோம். மழை நீரின் மூலம் கிடைக்கிற தண்ணீரை வீணாக்காமல், பாசன வசதிக்கு உறுதுணையாக இருப்பதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 558-ம், 559-ம் மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வேதாரண்யம் பகுதியில் உரத் தொழிற்சாலை.

*வினா எண் 560—திரு மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் ரூ. 100 கோடி திட்டத்தில் உரத் தொழில் ஆரம்பிக்க ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தென் மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு.

*வினா எண். 561 :—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 16—7—1978-ம் தேதி தென் மாநில முதலமைச்சர்களின் மாநாடு சென்னையில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் நகல் ஒன்று* அவையில் வைக்கப்பட்டுள்ளது.

[* 797—798 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]